**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4618

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.10.2021

Accepted: 21.11.2021

Published: 01.01.2022

Citation:
Murugesapandian, N. "Re- Reading of Bhartiyar's Education Thoughts." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 1–10.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4618

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Re- Reading of Bhartiyar's Education Thoughts

**N. Murugesapandian**

http://orcid.org/0000-0002-1831-7730

**Abstract -** Bharathiyar's thoughts on education are progressive in the educational environment that prevailed in Tamil Nadu centuries ago. They emphasized the social presence of the Tamils of the day and the need for social change. Through education, Bharathiar aimed to "teach that helping the poor, uplifting the lower castes, etc., enhanced the social and social duties". Among the creators of songs and essays detailing the need for education in the early twentieth century, there is no one to compare with him. Bharathiyar, in his poems and essays, has emphatically recorded his views on education. In particular, Bharathiar describes the preferences and expectations about education in two articles, National Education-1 and National Education-2. Those essays explain the basis of Bhartiyar's academic thoughts.

**Keywords:** Tamil Modern poetry, Bharathiyar poems, Criticism of poetry, Education, Sociolgical research.

## References

1. Subrmaniya Bharathiyar. 2000. *Bharathyiyar Katturaikal*. Chennai: Pazhaniappa Braothers.

# மறுவாசிப்பில் பாரதியாரின் கல்வியியல் சிந்தனைகள்

*ந. முருகேசபாண்டியன்*

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழகத்தில் நூற்றாண்டுகளுக்கு முன்னர் நிலவிய கல்விச் சூழலில் பாரதியாரின் கல்வி பற்றிய சிந்தனைகள், முற்போக்கானவை. அவை, அன்றைய தமிழரின் சமூக இருப்பையும் சமூகம் மாற்றமடைய வேண்டியதன் தேவையையும் வலியுறுத்தியுள்ளன. கல்வியின்மூலம் ஏழைகளுக்கு உதவி புரிதல், கீழ் ஜாதியாரை உயர்த்தி விடுதல் முதலியனவே ஜன சமூகக் கடமைகளின் மேம்பட்டன என்பதைக் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கம் பாரதியாருக்கு இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கல்வியின் அவசியம் குறித்துப் பாடல்களிலும் கட்டுரைகளிலும் விரிவாகப் படைத்த படைப்பாளிகளில், பாரதியாருடன் ஒப்பீட்டுச் சொல்ல யாருமில்லை. பாரதியார், தன்னுடைய கவிதைகளிலும் கட்டுரைகளிலும் கல்வி பற்றிய கருத்துக்களை அழுத்தமாகப் பதிவாக்கியுள்ளார். குறிப்பாகப் பாரதியார், தேசியக் கல்வி- 1, தேசியக் கல்வி- 2 ஆகிய இரு கட்டுரைகளில் கல்வி பற்றிய விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் போன்றனவற்றை விவரித்துள்ளார். அந்தக் கட்டுரைகள் பாரதியாருடைய கல்வியியல் சிந்தனைக்கு அடித்தளமாக விளக்குகின்றன.*

***முக்கியச் சொற்கள்:*** *நவீனத் தமிழ்க் கவிதை, பாரதியார் கவிதைகள், கவிதைத் திறனாய்வு, கல்வியியல், சமூகவியல் ஆய்வு*

**வயிற்றிற்குச்சோறிடவேண்டும் - இங்கு**
**வாழும்மனிதருக்கெல்லாம்;**
**பயிற்றிப்பலகல்விதந்து - இந்தப்**
**பாரைஉயர்த்திடவேண்டும்**

இன்றைய உலகமயமாக்கல் காலகட்டத்தில் எல்லாம் சந்தைக்கானதாக மாற்றப்பட்டு, நுகர்பொருள் பண்பாடு மேலாதிக்கம் செலுத்துகிறது. மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வியும் மருத்துவமும் கார்ப்பரேட்டுகளின் வரம்பினுக்குள் கொண்டு வரும் முயற்சிகள் துரிதமாக நடைபெறுகின்றன. இருபதாம் நூற்றாண்டில் எண்பதுகளின் இறுதியில் கல்விப்புலத்திற்குள் நுழைந்த தனியார்மயம், இன்று பிரமாண்டமாக வளர்ச்சியடைந்துள்ளது. கல்வி நிலையங்கள் மூலம் கல்வியைப் போதித்தல், கல்வி கற்றல் போன்றவை சமூகத்தின் ஆன்ம வளர்ச்சியுடன் தொடர்புடையவை என்ற கருத்தியல், முழுக்கப் புறக்கணிக்கப்படுகிற நிலை ஏற்பட்டுள்ளது. கல்வி என்பது சேவை என்ற அம்சம் புறக்கணிக்கப்பட்டு, கல்வி மாபியாக்களின் பொருளாதார ஆதாயத்திற்குள் கல்விக்கூடங்கள் இன்று சிக்கியுள்ளன. கல்வியை முன்வைத்துக் கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கிற கும்பல்கள், நாடெங்கும் பெருகியுள்ள சூழலில், பாரதியாரின் கல்வி பற்றிய மதிப்பீடுகளையும் சிந்தனைப் போக்குகளையும் ஒப்பீட்டு நிலையில் மறுவாசிப்புக்குள்ளாக்கிட வேண்டியுள்ளது. தமிழகத்தில் நூற்றாண்டுகளுக்கு முன்னர் நிலவிய கல்விச் சூழலில் பாரதியாரின் கல்வி பற்றிய சிந்தனைகள், முற்போக்கானவை. அவை, அன்றைய தமிழரின் சமூக இருப்பையும் சமூகம் மாற்றமடைய வேண்டியதன் தேவையையும் வலியுறுத்தியுள்ளன. கல்வியின் மூலம் ஏழைகளுக்கு உதவி புரிதல், கீழ் ஜாதியாரை உயர்த்திவிடுதல் முதலியனவே ஜன சமூகக்

கடமைகளின் மேம்பட்டன என்பதைக் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கம் பாரதியாருக்கு இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கல்வியின் அவசியம் குறித்துப் பாடல்களிலும் கட்டுரைகளிலும் விரிவாகப் படைத்த படைப்பாளிகளில், பாரதியாருடன் ஒப்பீட்டுச் சொல்ல யாருமில்லை.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தியத்தின் காலனியாதிக்க ஆட்சியில் சிக்கியிருந்த இந்தியாவை மீட்பதற்கான போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விடுதலை இயக்கத்தினர், சமூக சீர்திருத்தச் செயல்களிலும் ஈடுபட்டனர்; அன்றைய காலகட்டத்தில் பெரும்பான்மையான மக்கள் எழுதப் படிக்க அறியாதவர்களாக இருந்த சூழலை மாற்றியமைத்திட முயன்றனர். ஆங்கிலேயரின் காலனியாதிக்க ஆட்சியில், தமிழகத்தில் ஏற்கனவே நிலவிய கல்வி முறை, கிராமத்துத் திண்ணைப் பள்ளிக்கூடங்களைச் சார்ந்திருந்தது. அந்தக் காலகட்டத்தில் ஆங்கிலேயரின் புதிய கல்விமுறை அறிமுகமானது. குறிப்பாக 1857 இல் தொடங்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம், புதிய வகைப்பட்ட கல்வி கற்றலைப் பரவலாக்கியது. எனினும் வைதிக சநாதனத்தின் ஆதிக்கம் காரணமாக உயர் சாதியினராகக் கருதப்பட்ட பார்ப்பனர், பிள்ளைமார் போன்ற சாதியினர் மட்டும் தான் ஆங்கிலக் கல்வி கற்று ஆங்கிலேய அரசில் உயர் பதவிகள் வகித்தனர். விளிம்பு நிலையினரின் குழந்தைகள், தந்தையாரின் குலத்தொழிலைக் கற்றிடும் சூழல் நிலவியது. பெண்களுக்கும் தலித்துகளுக்கும் கல்வி கற்றிடும் வாய்ப்பு மிகவும் குறைவு. இந்நிலையில் இந்தியர்களுக்கான கல்வி முறையை முன்வைத்துப் பேச்சுக்களை உருவாக்கிட முயன்றவர்களில் காந்தியடிகள், ரவீந்திரநாத் தாகூர், விவேகானந்தர், பாரதியார் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். பாரதியார், தன்னுடைய கவிதைகளிலும் கட்டுரைகளிலும் கல்வி பற்றிய கருத்துக்களை அழுத்தமாகப் பதிவாக்கியுள்ளார். குறிப்பாகப் பாரதியார், தேசியக் கல்வி- 1, தேசியக் கல்வி- 2 ஆகிய இரு கட்டுரைகளில் கல்வி பற்றிய விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் போன்றனவற்றை விவரித்துள்ளார். அந்தக் கட்டுரைகள் பாரதியாருடைய கல்வியியல் சிந்தனைக்கு அடித்தளமாக விளக்குகின்றன. தேசத்தின் வாழ்வுக்கும் மேன்மைக்கும் தேசீயக்கல்வி இன்றியமையாதது. தேசீயக்கல்வி கற்றுக்கொடுக்காத தேசத்தை தேசமென்று சொல்லுதல் தகாது. அது மனிதப் பிசாசுகள் கூடி வாழும் விஸ்தாரமான சுடுகாடேயாம். இந்த விஷயத்தை ரவீந்திரநாத்தாகூர், ஆனிபெஸண்ட், நீதிபதி மணிஅய்யர் முதலிய ஞானிகள் அங்கீகரித்து, நம்நாட்டில் தேசீயக் கல்வியைப் பரப்புவதற்குரிய தீவிரமான முயற்சிகள் செய்கின்றனர். ஆதலால் இதில் சிறிதேனும் அசிரத்தை பாராட்டாமல், நமது தேசமுழுதும், ஒவ்வொரு கிராமத்திலும் மேற்கூறியபடி பாடசாலைகள் வைக்க முயலுதல் நம்முடைய ஜனங்களின் முதற்கடமையாகும் என்ற பாரதியாரின் கல்வி ஆர்வம் முக்கியமானது.

பாரதியாரின் கல்வி, தாய்மொழிக் கல்வி, தமிழ் மொழி பற்றிய கருத்துகளை அறிந்து கொள்வதற்கு முன்னர் காலனியாதிக்கக் காலகட்டத்தில் வைதிக சநாதனத்தின் செயல்பாடுகளைப் அவதானிக்க வேண்டியது அவசியம். 1886 ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது காங்கிரஸ் மாநாட்டுத் தீர்மானங்கள் குறித்து அந்த மாநாட்டில் நேரடியாகப் பங்கேற்ற சே. ப. நரசிம்மலுநாயுடு எழுதியுள்ளவை 'ஆரியர் திவ்விய தேசயாத்திரையின் தேசம்' (1913) என்ற புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஏழாவது தீர்மானம் முக்கியமானது. அது பின்வருமாறு: கவர்ன்மெண்டு பரிக்ஷையில்

சம்ஸ்கிருதமும், அரபி பாஷையும் கலந்து இந்த இந்து தேசத்திலேயே, சீமையிலிருப்பது போலவே ஒரே காலத்தில் பரிக்ஷை நடத்தித் தேறினவர்களுக்குப் பெரிய உத்தியோகங்களைக் கொடுக்க வேண்டுமென்றும், அந்தப் பரிக்ஷைக்கு 19 முதல் 23 வரைக்கும் வயதை உயர்த்த வேண்டுமென்றும் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் பாபுநரேந்தரநாத் பானர்ஜி அவர்கள் பிரேரேபிக்க ஆனரெபில் சுப்பிரமணியம் ஐயர் அவர்கள் ஆமோதிக்கசர்வசம் மதமாக அங்கீகரிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தை ஆமோதித்த சுப்பிரமனிய ஐயர், தமிழ்நாட்டில் இருந்து சென்று காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்றார்.

ஆயிரமாண்டுகளுக்கும் கூடுதலாகத் தமிழகத்தில் மன்னராட்சிக் காலத்தில் சம்ஸ்கிருத மொழியிலான வேதம் ஓதுதல் பார்ப்பனரின் குலத்தொழில் எனவிதி வகுத்த மநுதரும சாஸ்திரம் மூலம், சாதிய அடுக்கில் உச்சத்தில் இருந்த பார்ப்பனர்கள், இந்தியாவில் ஆங்கிலேயக் காலனிய அரசாங்கம் ஏற்பட்டவுடன், அரசு இயந்திரத்தில் உயர்பதவி வகித்திட மீண்டும் சம்ஸ்கிருதத்தை முன்னிறுத்திய செயல், ஆதிக்க அரசியலாகும்; பொருளாதாரீதியில் எப்பொழுதும் வளமுடன் இருந்திட செய்த தந்திரமாகும். சமூக அடுக்கின் உச்சியில் தங்களுடைய இடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளத் தீர்மானித்த பார்ப்பனர்களின் முயற்சிதான், சம்ஸ்கிருத மொழியில் அரசாங்க உயர் அலுவலர் தேர்வுகளை நடத்திட வேண்டுமெனத் தீர்மானத்தைக் காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றி, இங்கிலாந்து மகாராணியாருக்கு அனுப்பிய தன் அடிப்படையாகும். இந்தியாவில் மக்களிடையே வழக்கினில் இருக்கிற தமிழ், வங்காளம், தெலுங்கு, உருது, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளைப் புறந்தள்ளிவிட்டு, வழக்கொழிந்த சம்ஸ்கிருத மொழியில் காலனிய அரசின் தேர்வுகள் நடத்திட 1886 ஆம் ஆண்டில் தீர்மானம் இயற்றியது நுண்ணரசியல். வழக்கொழிந்த சம்ஸ்கிருதம் என்ற மொழியை வைத்துக் கொண்டு இரண்டாயிரமாண்டுகளாக இந்தியாவெங்கும் செய்துவருகிற ஆதிக்க அரசியலின் தொடர்ச்சிதான், அண்மையில் வெளியான ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையில் வெளிப்பட்டுள்ளது.

பாரதியார், தேசமானது குடும்பங்களின் தொகுதி என்றும், குடும்ப உறவில் ஒத்துப் போகாத கணவனும் மனைவியும் பிரிந்து வாழும்போது குடும்ப அமைப்பு சிதலமடைவதால், தேசியக் கல்விக்கு இடமில்லை என்கிறார். ஐரோப்பியர்கள், இஸ்லாமியர்களின் சட்டங்களில் மணமுறிவுக்கு அனுமதி இருப்பதை அறிந்தபோதும், முன்னோரால் நிறுவப்பட்ட குடும்ப அமைப்பைப் போற்றுகிற நிலையில் தேசியக் கல்விக்கும் குடும்பத்திற்கும் இடையில் வலுவான தொடர்பை நிறுவிட பாரதியார் முயன்றுள்ளார்.

பாரதியாரின் தேசியக் கல்வி, தேச பாஷை, தமிழ் மொழி, வடமொழி எனப்படும் சமஸ்கிருதம், ஆங்கில மொழி பற்றிய விவரணைகள் முக்கியமானவை. ஆர்ய பாஷையான சம்ஸ்கிருதத்தைத் தேசிய மொழியாக அறிவிக்க வேண்டுமானால், தமிழ்நாட்டில் தமிழ் மொழியின்முலம் கல்வியைக் கற்பிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, இந்தியா முழுவதும் சம்ஸ்கிருதம் பரவிட வேண்டுமெனப் பாரதியார் விரும்புகிறார். தமிழ்நாட்டில் தேசீயக் கல்வியென்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ்பாஷையை ப்ரதானமாக நாட்டாமல், பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால், அது 'தேசீயம்' என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியுமென்பதில் ஐயமில்லை. தேசபாஷையே ப்ரதானம் என்பது தேசீயக் கல்வியின் ஆதாரக்கொள்கை; இதை மறந்து விடக்கூடாது. தேசபாஷையை

விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிற இந்த முயற்சிக்கு நாம் தமிழ்நாட்டிலிருந்து பரிபூர்ண ஸஹாயத்தை எதிர்பார்க்க வேண்டுமானால், இந்த முயற்சிக்குத் தமிழ்பாஷையே முதற்கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத் தம்பட்டம் அறைவிக்க வேண்டும். இங்ஙனம் தமிழ் ப்ரதானம் என்று நான் சொல்லுவதால், டாக்டர் நாயரைத் தலைமையாகக் கொண்ட திராவிடக் கக்ஷியார் என்ற போலிப் பெயர் புனைந்த தேசவிரோதிகளுக்கு நான் சார்பாகி ஆர்யபாஷை விரோதம் பூண்டு பேசுகிறேன் என்று நினைத்து விடலாகாது. தமிழ்நாட்டிலே தமிழ் சிறந்திடுக. பாரத தேச முழுதிலும் எப்போதும் போலவே வடமொழி வாழ்க. இன்னும் நாம் பாரத தேசத்தின் ஐக்கியத்தைப் பரிபூர்ணமாகச் செய்யுமாறு நாடு முழுவதிலும் வடமொழிப் பயிற்சி மேன்மேலும் ஓங்குக. எனினும், தமிழ்நாட்டில் தமிழ்மொழி தலைமை பெற்றுத்தழைத்திடுக. 1886 ஆம் ஆண்டில் நடை பெற்ற இரண்டாவது காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஏழாவது தீர்மானம், பாரதியாரால் தேசியக் கல்வி என்ற பெயரில் மீண்டும் முன்மொழியப்பட்டுள்ளது. பாரதியார், தமிழ்நாட்டில் தமிழ் மொழி முதன்மையானது என்று குறிப்பிடும்போது, டாக்டர் நாயரின் தலைமையிலான திராவிடக் கட்சி, தேச விரோதி போன்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். ஆங்கிலேய அரசு நடத்தும் பள்ளிகளில் ஆங்கிலம் மூலம் கல்வி கற்றுக்கொண்டிருந்த உயர் சாதியினரை நோக்கி, இந்திய அளவில் சமஸ்கிருதம் போலத் தமிழ்நாட்டில் தமிழ் மொழி முக்கியமானது என்ற பாரதியாரின் கெஞ்சிடும் கூற்று, அன்றைய காலகட்டத்தில் குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் தமிழ், இந்தியா முழுவதும் ஆர்ய பாஷையாகிய சமஸ்கிருதம் என்ற பாரதியாரின் பார்வையில், வைதிக சநாதனத்தின் மேலாதிக்கம் பொதிந்துள்ளது. சமஸ்கிருதம் போலத் தமிழும் சிறந்த மொழி என்று வேதம் ஓதுகிற பார்ப்பனர்களிடம் பாரதியார் மன்றாடுவது புலப்படுகிறது.

கல்வியின் அருமையை அறிந்திட்ட பாரதியார் கிராமந்தோறும் பள்ளிக்கூடங்களை நிறுவுவதற்கான வழிமுறைகளை விவரித்துள்ளார். பள்ளிக்கூடத்திற்கு ஆசிரியர்கள் நியமித்தல், ஆசிரியர்களின் கல்வித் தகுதிகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாட்டில் ஏற்படும் தேசீயப் பாடசாலைகளில் உபாத்தியாயராக வருவோர் திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களிலாவது தகுந்த பழக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். சிறந்த ஸ்வதேசாபிமானமும், ஸ்வதர்மாபிமானமும், எல்லா ஜீவர்களிடத்திலும் கருணையும் உடைய உபாத்தியாயர்களைத் தெரிந்தெடுத்தல் நன்று. தேசீயப் பாட சாலை என்ற சொற்கள் மூலம் பள்ளிக்கூடம் குறிப்பிடப்படுவது கவனத்திற்குரியது.

பள்ளிக்கூடத்தில் போதிக்கப்பட வேண்டிய பாடங்கள் குறித்த பாடத்திட்டத்தைத் திட்டமிடுவதில் பாரதியாரின் நோக்கம் அழுத்தமானது. கல்வியின் முலம் மாணவர்கள் கற்றுத் தேர்ந்து பொருளாதார ரீதியில் வளமுடன் வாழ்தல் என்ற கருதுகோள் பாரதியாருக்கு இல்லை. அதே வேளையில் தேச பாஷையான தமிழ் மொழியில் கற்பித்தல் வேண்டுமென்ற கருத்தின் மறுதலையாக ஆங்கிலேயரின் ஆங்கில மொழியின் மூலம் கற்பித்தலைப் புறக்கணித்தல் என்பது பாரதியாரின் விருப்பம். வரலாற்றுப் பாடத்தில் இடம் பெற வேண்டிய பாடங்கள்: வேதகால சரித்திரம், புராணகால சரித்திரங்கள், பௌத்த காலத்துச் சரித்திரம், ராஜபுதனத்தின் சரித்திரம் பள்ளிக்கூடம் ஏற்படுத்தப் போகிற கிராமம் அல்லது பட்டணம் எந்த மாகாணத்தில் அல்லது எந்த ராஷ்ட்ரத்தில் இருக்கிறதோ, அந்த மாகாணத்தின் சரித்திரம் விசேஷமாகப் பயிற்று விக்கப்பட வேண்டும். பள்ளிப் பிள்ளைகளுக்கு ஆரம்ப வகுப்பிலேயே நம்முடைய புராதன சரித்திரத்தில் அற்புதமான பகுதிகளையூட்டி, அசோகன், விக்ரமாதித்யன், ராமன், லக்ஷ்மணன், தர்மபுத்திரன், அர்ஜுனன் இவர்களிடமிருந்த சிறந்த

குணங்களையும் அவற்றால் அவர்களுக்கும் அவர்களுடைய குடிகளுக்கும் ஏற்பட்ட மஹிமைகளையும் பிள்ளைகளின் மனதில் பதியும்படி செய்வது அந்தப் பிள்ளைகளின் இயல்பைச் சீர்திருத்தி மேன்மைப்படுத்துவதற்கு நல்ல சாதனமாகும். புராண, இதிகாசக் கதைகளின் கதைமாந்தர்களைப் பற்றிச் சொல்லி, மாணவர்களின் மனதில் சிறந்த பண்புகளை ஏற்படுத்திட முடியுமென்ற மரபான நம்பிக்கை பாரதியாருக்கு இருந்தது. இந்திய வரலாற்றுக்கும் இதிகாச, புராணக் கதைமாந்தர்களுக்கும் என்ன தொடர்பு என்ற கேள்வி தோன்றுகிறது.

இந்தியக் கதை சொல்லல் மரபில் அதியற்புதப் புனைவென்றாலும் முன்னொரு காலத்தில் நடந்த கதை என்று சொல்கிற வழக்கு, இன்றளவும் நிலவுகிறது. இந்தப் போக்கினை இந்தியக் கதையாடலின் பொதுத்தன்மையானதாகக் கருதமுடியும். எடுத்துக்காட்டாக மகாபாரதம் கற்பனைக் கதையல்ல என்றும், கி.மு. 1000 இல் நடைபெற்ற உண்மைச் சம்பவம் என்றும் சராசரி இந்தியர்கள் நம்புகின்றனர். வைதிகசநாதன மதத்தின் மேலாதிக்கத்தை இந்தியாவில் வாழ்கிற பாமரரிடம் பரவலாக்கிட அன்றும் இன்றும் இதிகாசங்கள் பயன்படுகின்றன. இடைக்காலத்தில் கடவுள்களை முன்வைத்துக் கட்டுக்கதைகள் நிரம்பிய புராணங்கள், அதிக எண்ணிக்கையில் எழுதப்பட்டன. புராணம் என்ற சொல்லுக்குக் 'கடந்தகாலத்தின் கதை' என்று பொருள். இதிகாசங்களை உண்மையில் நடந்தவை என்று நம்புகிற மரபான சிந்தனையின் வெளிப்பாடாகப் பாரதியாரின் வரலாறு பாடத்திட்டம் உள்ளது. வட இந்திய மன்னரான அசோகன் பற்றிக் குறிப்பிடப்படும் பாடத் திட்டத்தில் தமிழக மன்னர்கள் பற்றிய பேச்சுகள் எதுவுமில்லை. அவர் வாழ்ந்த காலத்தில் தமிழ்நாட்டு வரலாறு, தமிழ் மொழி வரலாறு தொல்லியல், கல்வெட்டு ஆய்வு பற்றிப் பெரிய அளவில் வரலாற்று நூல்கள் வெளியாகவில்லையா என்பது ஆய்விற்குரியது.

பாரதியார் விவரிக்கிற புவியியல் பாடத் திட்டம் பற்றிய விரிவான விவரணை முக்கியமானது. ஆரம்ப பூகோளமும், அண்டசாஸ்த்ரமும், ஜகத்தைப்பற்றியும், ஸூரிய மண்டலத்தைப் பற்றியும், அதைச் சூழ்ந்தோடும் கிரகங்களைப் பற்றியும், நக்ஷத்திரங்களைப் பற்றியும், இவற்றின் சலனங்களைப் பற்றியும் பிள்ளைகளுக்கு இயன்றவரை தக்க ஞானம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பூமிப்படங்கள், கோளங்கள், வர்ணப்படங்கள் முதலிய கருவிகளை ஏராளமாக உபயோகப்படுத்த வேண்டும். ஐந்துகண்டங்கள், அவற்றிலுள்ள முக்கிய தேசங்கள், அந்த தேசங்களின் ஜனத்தொகை, மதம், ராஜ்யநிலை, வியாபாரப் பயிற்சி, முக்கியமான விளைபொருள்கள், முக்கியமானகைத் தொழில்கள் இவற்றைக் குறித்து பிள்ளைகளுக்குத் தெளிந்த ஞானம் ஏற்படுத்த வேண்டும் பாரதபூமிசாஸ்த்ரம், இந்தியாவிலுள்ள மாகாணங்கள், அவற்றுள், அங்குள்ள தேசபாஷைகளின் வேற்றுமைக்குத் தகுந்த படிஇயற்கையைத் தழுவி ஏற்படுத்தக் கூடிய பகுதிகள்-இவை விசேஷசிரத்தையுடன் கற்பிக்கப்பட வேண்டும் மாகாணங்களில் வசிக்கும் ஜனங்கள், அங்கு வழங்கும் முக்கிய பாஷைகள், முக்கியமானஜாதிப் பிரிவுகள், தேச முழுமையும் வகுப்புகள் ஒன்று போலிருக்கும் தன்மை, மத ஒற்றுமை, பாஷைகளின் நெருக்கம், வேதபுராண இதிஹாஸங்கள் முதலிய நூல்கள் பொதுமைப் பட வழங்குதல், இவற்றிலுள்ள புராதன ஒழுக்க ஆசாரங்களின் பொதுமை, புண்ணிய க்ஷேத்திரங்கள், அவற்றின் தற்கால நிலை, இந்தியாவிலுள்ள பெரியமலைகள், நதிகள், இந்தியாவின் விளை பொருள்கள், அளவற்ற செல்வம், ஆஹாரபேதங்கள், தற்காலத்தில் இந்நாட்டில் வந்து குடியேறியிருக்கும் பஞ்சம், தொத்து நோய்கள், இவற்றின்

காரணங்கள், ஜலவஸதிக் குறைவு, வெளிநாடுகளுக்கு ஜனங்கள் குடியேறிப்போதல் - இந்த அம்சங்களைக் குறித்து மாணாக்கருக்குத் தெளிவான ஞானம் ஏற்படுத்தப்பட வேண்டும். புவியியல் பாடத்தில் மாணவர்கள் கற்க வேண்டிய பாடங்கள் என்று பாரதியார் பரிந்துரைப்பது இன்றைக்கும் பொருத்தமானது. இன்னொரு வகையில் அவருடைய பிரபஞ்சம் குறித்த அறிவியல்பூர்வமான தேடல். ஆங்கிலேயரின் காலனியாதிக்க காலத்தில் ஏற்பட்ட கொடூரமான பஞ்சங்கள், தொற்று நோய்களினால் மக்கள் கொத்துக்கொத்தாக இறத்தல், ரயத்துவாரி, ஜமீந்தாரி போன்ற முறைகளினால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் போன்றவற்றைப் புவியியல் பாடத்தில் சேர்க்க வேண்டுமென்ற பாரதியாரின் பாடத்திட்டம், ஏகாதிபத்திய எதிர்ப்புடன் தொடர்புடையது.

பள்ளிக்கூடத்தில் சேர்ந்து பயிலுகிற மாணவர்களுக்கு வைதிக சநாதன மதக் கல்வி தொடர்பான விஷயங்களைப் போதிக்க வேண்டுமென்ற எண்ணம் பாரதியாருக்கு இருந்தது. பள்ளிக் கல்வியில் மதம் எதற்கு என்ற இன்றைய அணுகுமுறையை, பாரதியார் வாழ்ந்த காலச்சூழலுடன் பொருத்திப் பார்க்க இயலாது. ஆங்கிலேயரின் கிறிஸ்தவ சமயத்திற்கு எதிராக ஹிந்து மதம் என்ற பெயரில் வைதிக சநாதன மதத்தை முன்னிறுத்த வேண்டிய நெருக்கடி அன்றைக்குப் பாரதியாருக்கு இருந்தது. ஹிந்து மதம் என்றால் வைதிக சநாதன மதம் என்ற பார்வையின் அடிப்படையில் நான்கு வேதங்கள், ஆறுதர்சனங்கள். உபநிஷத்துக்கள், புராணங்கள், இதிஹாஸங்கள், பகவத்கீதை, பக்தர் பாடல்கள், சித்தர் நூல்கள் - இவற்றை ஆதாரமாகக் கொண்டது ஹிந்துமதம் என்று வரையறை செய்கிறார். வேதம் ஓதுவதைக் கேட்கிற சூத்திரன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டுமென்ற மனு தருமம் ஏற்படுத்தியுள்ள கட்டுப்பாடுகளும் தண்டனைகளும் பாரதியாருக்கு நினைவில் இல்லை. வருணாசிரமம் ஏற்படுத்தியுள்ள பிறப்பின் அடிப்படையில் நிலவுகிற சாதிய ஏற்றத் தாழ்வுகளும் பால் அடிப்படையில் பெண்களை ஒதுக்குதலும் குறித்து அக்கறை இல்லாமல், இந்தியர்கள் எல்லோரையும் ஹிந்து என்ற பெயரில் வரையறுத்துள்ளார். மதவிஷயமான போராட்டங்கள் எல்லாம் சாஸ்தரவிரோதம்; ஆதலால், பரம மூடத்தனத்துக் குலக்ஷணம். ஆசாரங்களை எல்லாம் அறிவுடன் அனுஷ்டிக்க வேண்டும். ஆனால், ஸமயக் கொள்கைக்கும் ஆசார நடைக்கும் தீராத ஸம்பந்தம் கிடையாது. ஸமயக் கொள்கை எக்காலத்திலும் மாறாதது கடந்த ஆயிரமாண்டுகளுக்கும் கூடுதலாக மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் வைதிக சநாதனத்தின் விளைவான வருணாசிரமம், தமிழகத்தில் வலுவாக நிலவியது. சாதிய ஏற்றத்தாழ்வுகளும் தீண்டாமையும் செல்வாக்குடன் விளங்கிய சூழலில், வேதம் ஓதுவதை முதனமையாகக் கொண்ட பார்ப்பனர்கள் சௌகரியமாக வாழ்ந்து வந்தனர். ஆங்கிலேயரின் காலனியாதிக்க ஆட்சியில் வைதிக சநாதனத்தின் பேரில் இதுவரை நடைபெற்ற உடன்கட்டை ஏறுதல், குழந்தை திருமணம், தீண்டாமை போன்ற சமூகக் கொடுமைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டதனால், ஆங்கிலேயரின் காலனியாதிக்கத்தை எதிர்த்துத் தொடக்கத்தில் போராடியவர்களில் பெரும்பான்மையினர் பார்ப்பனர் உள்ளிட்ட உயர்சாதியினர் தான். அன்றைய சமூகப் பிரச்சினைகளுக்குக் காரணம் பிரிட்டிஷாரின் அதிகாரம் தான் என்று திசை திருப்பும் வேலை நடைபெற்றது. சமூக மதிப்பீட்டில் உயர்சாதியினர் தங்களுடைய இருப்பினை மீண்டும் தக்க வைத்துக்கொள்ள எல்லோருக்கும் கல்வி என்ற போர்வையில் மீண்டும் ஹிந்து மதப் படிப்பு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. கல்வி பற்றிய பாடல்களில் வெளிப்படும் போராளியான பாரதியாருக்கும், கட்டுரைகளில் வெளிப்படும் சநாதன கருத்துகளை முன்வைக்கும் பாரதியாருக்கும் இடையில் அழுத்தமான முரண்கள் உள்ளன.

**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**அன்னவாயினும் புண்ணியங்கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்**

பாமரருக்கும் ஏழை எளியோருக்கும் கல்வி என்ற உயரிய நோக்கத்துடன் செயல்பட்ட பாரதியாருக்கு வைதிக சநாதனக் கருத்தியல் தாக்கம், ஒருவகையில் பின்னடைவுதான்.

அரசியல் எப்படியெல்லாம் மக்களின் அன்றாட வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என்ற புரிதல் இல்லாத காலகட்டத்தில் அரசாங்கம் பற்றிய பாடத்தைக் கல்வியில் சேர்க்க வேண்டுமென்ற பாரதியாரின் கல்வியியல் சிந்தனை, காலத்தை மீறியது. ஜனங்களுக்குள்ளே ஸமாதானத்தைப் பாதுகாப்பதும், வெளிநாடுகளிலிருந்து படை எடுத்துவருவோரைத் தடுப்பதும் மாத்திரமே ராஜாங்கத்தின் காரியங்கள் என்று நினைத்துவிடக் கூடாது குடிகளின் நன்மைக்காகவே அரசு ஏற்பட்டிருப்பதால், அந்த அரசியலைச் சீர்திருத்தும் விஷயத்தில் குடிகளெல்லாரும் தத்தமக்கு இஷ்டமான அபிப்பிராயங்களை வெளியிடும் உரிமை இவர்களுக்கு உண்டு. இந்த விஷயங்களையெல்லாம் உபாத்தியாயர்கள் மாணாக்கர்களுக்குக் கற்பிக்குமிடத்தே, இப்போது பூமண்டலத்தில் இயல்பெறும் முக்கியமான ராஜாங்கங்கள் எவ்வளவு தூரம் மேற்கண்ட கடமைகளைச் செலுத்தி வருகின்றன என்பதையும் எடுத்துரைக்க வேண்டும். தேசியக் கல்வி என்ற வரையறையில் அரசியல், அரசாங்கம் பற்றிய பாடத்திட்டம் எப்படி இருக்க வேண்டுமென்று பாரதியார் வரையறுத்திருப்பது சமூக அக்கறையின் வெளிப்பாடு.

தமிழ்நாட்டில் அறிவியல் கருத்துகள் எதுவும் பரவிடாத காலகட்டத்தில் கல்வியில் அறிவியல் பாடத்தைச் சேர்க்க வேண்டுமென்ற பாரதியின் நோக்கத்தில் ஆங்கிலக் கல்வி முறையின் தாக்கம் இருக்கிறது. அவர், ஐரோப்பியரின் அறிவியலைக் கருவிகள் மூலமாகச் சோதனைகள் நடத்திக் கற்பித்தல் தேசியக் கல்வி போதனையில் அவசியம் என்று கருதினார். இயற்கை நூல்(பிஸிக்ஸ்), ரசாயனம் (கெமிஸ்ட்ரி), சரீர சாஸ்திரம், ஜந்து சாஸ்திரம், செடிநூல் (ஸ்தாவர சாஸ்திரம்) ஆகிய ஐந்து துறைப் பாடங்களையும் அறிவியலில் உள்ளடக்கியிருப்பது தேசியக் கல்வி கற்பித்தலில் முக்கிய இடம் வகிக்கிறது. அறிவியல் பாடம் நடத்தும் போது தமிழாக்கப்படும் கலைச்சொற்களில் என்ன வகையான அணுகுமுறையைக் கையாள வேண்டுமென்ற பாரதியார் விரிவாக எடுத்துரைத்துள்ளார். வேதியியல் கல்வியைப் பற்றிய போதனையில் நோய்க் கிருமிகள் குறித்து எதிர்மறையான கருத்துகளை முன்வைத்துள்ளார். ரஸாயன சாஸ்திரம் மிகவும் பிரதானமாகையால் ரஸாயன பயிற்சியிலே அதிக சிரத்தை காண்பிக்க வேண்டும். கண்ணுக்குத் தெரியாத நுட்பமான பூச்சிகள் தண்ணீர் மூலமாகவும், காற்று மூலமாகவும், மண் மூலமாகவும் பரவி நோய்களைப் பரப்புகின்றன என்ற விஷயம் ஐரோப்பிய ‘ஸயன்ஸ்’ மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதில் ஒரு சிறிது உண்மை இருப்பது மெய்யேயாயினும், மனம் சந்தோஷமாகவும் ரத்தம் சுத்தமாகவும் இருப்பவனை அந்தப் பூச்சிகள் ஒன்றும் செய்யமாட்டா என்பதை ஐரோப்பியப் பாடசாலைகளில் அழுத்திச் சொல்லவில்லை. அதனால், மேற்படி சாஸ்திரத்தை நம்புவோர் வாழ்நாள் முழுவதும் ஸந்தோஷமாய் இராமல் தீராத நரக வாழ்க்கை வாழ்கிறார்கள். ஆதலால், நமது தேசீய ஆரம்பப் பாடசாலையில் மேற்படி பூச்சிகளைப் பற்றின பயம் மாணாக்கருக்குச் சிறிதேனும் இல்லாமல் செய்துவிட வேண்டும். உலகமே காற்றாலும், மண்ணாலும், நீராலும் சமைந்திருக்கிறது. இந்த மூன்று பூதங்களை விட்டு விலகி வாழயாராலும் இயலாது.

இந்த மூன்றின் வழியாகவும் எந்த நேரமும் ஒருவனுக்கு பயங்கரமான நோய்கள் வந்துவிடக்கூடும் என்ற மஹாநாஸ்திகக் கொள்கையை நவீன ஐரோப்பிய சாஸ்திரிகள் தாம் நம்பி ஓயாமல் பயந்துபயந்து மடிவது போதாதென்று அந்த மூடக்கொள்கையை நமது தேசத்தில் இளஞ்சிறுவர் மனதில் அழுத்தமாகப் பதியும்படி செய்துவிட்டார்கள். பாரதியார் வாழ்ந்த காலத்தில் இந்தியர்களின் சராசரி வாழும் வயது 25. அன்றைய காலகட்டத்தில் பச்சிளம் சிசு மரணம் அதிகம். மகப்பேறின் போது மருத்துவ வசதியின்மையினால் சூலுற்ற இளம் பெண்கள் ஏராளமாக இறந்தனர். நோய் என்பது பாவத்தின் விளைவு. ஏவல், பில்லி, சூன்யம், செய்வினை போன்றவற்றால் நோய் ஏற்படுகிறது என்ற பொதுப்புத்தி நிலவியது. தூய நீரை அருந்தாமல் வயிற்றுப் போக்கினால் பலர் மாண்டனர். அம்மை நோய் மாரியம்மனின் கோபத்தினால் வருவது, காலரா நோய் காளியின் சாபம் என்று எங்கும் மூடநம்பிக்கைகள் நிலவிய சூழலில், போதிய மருத்துவ வசதி இல்லாமல் இறந்தவர்களின் எண்ணிக்கைக்குக் கணக்கேது? இத்தகு சூழலில் அறிவியல் கல்வியை வரவேற்கும் பாரதியார், நோயை உருவாக்கிடும் கிருமிகள் பற்றிய எச்சரிக்கை உணர்வு அல்லது பயத்தை 'மஹா நாஸ்திகக் கொள்கை' என்று எதிர்க்கிறார். மனித உடலில் ஏற்படும் நோய் பற்றிய அறிவியல் பார்வையை மறுப்பதில் பாரதியின் கல்வியியல் சிந்தனை தெளிவற்று உள்ளது; அறிவியலையும் வைதிக சநாதன மதத்தையும் ஒன்றிணைத்துக் குழம்பிடும் போக்குக் காணப்படுகிறது.

கைத்தொழில், வேளாண்மை, தோட்டப் பயிரிடுதல், சிறு வணிகம் போன்றவை குறித்து மாணவர்களுக்குப் பள்ளியில் போதிக்க வேண்டுமென்ற பாரதியாரின் அக்கறை கவனத்திற்குரியது. மாணாக்கர்கள் எல்லாருக்கும் விசேஷமாகத் தொழிலாளிகளின் பிள்ளைகளுக்கு, நெசவு முதலிய முக்கியமான கைத்தொழில்களிலும், நன்செய், புன்செய்ப் பயிர்த்தொழில்களிலும், பூ, கனி, காய், கிழங்குகள் விளைவிக்கும் தோட்டத் தொழில்களிலும், சிறு வியாபாரங்களிலும் தகுந்த ஞானமும் அனுபவமும் ஏற்படும்படி செய்தல் நன்று. எல்லோருக்கும் ஒரே மாதிரியான கல்வியைப் போதிக்க வேண்டுமென்ற நடைமுறைக்கு மாறாகத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு மட்டும் கைத்தொழில், பயிர்த்தொழில், தோட்டமிடுதல் போன்றவற்றில் தனிப்பட்ட பயிற்சிகள் தரவேண்டுமென்பது, ஒருவகையில் குலத்தொழிலைச் செய்யுமாறு ஊக்குவிப்பதாகும். வேதம் ஓதுகிற பார்ப்பனர்களின் பிள்ளைகள் எவ்விதமான உடலுழைப்பும் இல்லாமல் ஓய்வாக இருப்பதை உள்ளடக்கியது தேசியக் கல்வி என்ற வரையறை ஏற்புடையது அல்ல.

பள்ளி மாணவர்களுக்கு உடற்பயிற்சி அவசியம் என்ற கருத்துடைய பாரதியாரின் கருத்து, முக்கியமானது. படிப்பைக் காட்டிலும் விளையாட்டுக்களில் பிள்ளைகள் அதிக சிரத்தை எடுக்கும் படிசெய்யவேண்டும். 'சுவரில்லாமல் சித்திரமெழுத முடியாது. பிள்ளைகளுக்கு சரீரபலம் ஏற்படுத்தாமல் வெறுமே படிப்பு மாத்திரம் கொடுப்பதால், அவர்களுக்கு நாளுக்கு நாள் ஆரோக்கியம் குறைந்து அவர்கள் படித்தபடிப்பெல்லாம் விழலாகி, அவர்கள் தீராத துக்கத்துக்கும் அற்பாயுசுக்கும் இரையாகும்படி நேரிடும். மாணவர்கள் ஓட்டம், கிளித்தட்டு, சடுகுடு போன்ற இந்திய விளையாட்டுக்களுடன் ஐரோப்பியரின் கால்பந்து விளையாட்டு மற்றும் கவாத்து எனப்படும் டிரில் பழகிட வேண்டுமென்று பாரதியார் பரிந்துரைப்பது இன்றைக்கும் மாணவர்களின் உடல்நலத்திற்கு அடிப்படையானதாகும். கல்வி என்றால் பாடப் புத்தகம் மட்டுமல்ல மாணவர்களின் உடல்நலத்துடன் தொடர்புடையது என்ற பார்வை அறிவியல்பூர்வமானது.

பள்ளி மாணவர்களுக்குச் சுற்றுச்சூழலை அறிமுகப்படுத்தும் நோக்கில் அவர்களைப் பயணமாகஅழைத்துச்சென்று இயற்கையின் அழகை ரசிப்பதற்கு ஆசிரியர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற பாரதியாரின் திட்டம், அதியற்புதமானது.

தேசியப் பள்ளிக்கூடம் நடத்துவதற்கான செலவினங்களுக்கான நிதி திரட்டல் பற்றிய பாரதியாரின் பார்வை, புறநிலையில் பள்ளியைத் தொடங்கி நடத்திடுவதற்கான ஆலோசனையை வழங்குகிறது. தேசீயப் பள்ளிக்கூடம் நடத்துவதற்கு அதிகப்பணம் செலவாகாது. மாசம் நூறுரூபாய் இருந்தால் போதும். இந்தத் தொகையை ஒவ்வொரு கிராமத்திலுள்ள ஜனங்களும் தமக்குள்ளே சந்தா வசூலித்துச் சேர்க்கவேண்டும். செல்வர்கள் அதிகத்தொகையும் மற்றவர்கள் தத்தமக்கு இயன்றளவு சிறுதொகைகளும் கொடுக்கும் படி செய்யலாம். 100 ரூபாய்கூட வசூல் செய்ய முடியாத கிராமங்களில் 50 ரூபாய் வசூலித்து. உபாத்தியாயர் மூவருக்கும் தலைக்கு மாசச் சம்பளம் 12 ரூபாய் கொடுத்து, மிச்சத் தொகையை பூ கோளக் கருவிகள், "ஸயன்ஸ்" கருவிகள், விவசாயக் கருவிகள் முதலியன வாங்குவதில் உபயோகப்படுத்தலாம் எல்லாவிதமான தானங்களைக் காட்டிலும் வித்யாதானமே மிகவும் உயர்ந்தது என்று ஹிந்து சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. மற்ற மதநூல்களும் இதனையே வற்புறுத்துகின்றன. ஆதலால் ஈகையிலும் பரோபகாரத்திலும் கீர்த்தி பெற்றதாகிய நமது நாட்டில், இத்தகைய பள்ளிக்கூடமொன்றை மாச வசூல்களாலும், நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் அல்லது சிறுசிறு தொகைகளாகவும் சேகரிக்கப்படும் விசேஷ நன்கொடைகளாலும் போஷித்தல் சிரமமான காரியம் அன்று. ஆங்கிலேய அரசின் உதவியைப் பெற்றிடாமல், மக்களிடம் இருந்து பணம் வசூலித்துப் பள்ளிக்கூடங்களை நடத்திட வேண்டுமென்ற பாரதியாரின் எண்ணம், ஆங்கிலேய எகாதிபத்தியத்திய எதிர்ப்பின் வெளிப்பாடாகும்.

இந்தியா, ஹிந்து, சமஸ்கிருதம், வைதிக சநாதனம் ஆகிய பரிமாணங்களுடன் தமிழ் மொழியையும் உள்ளடக்கியதாகப் பாரதியாரின் கல்விக் கொள்கையின் தளம் அமைந்துள்ளது. தேசியக் கல்வியில் தமிழ்நாட்டுப் பெண்களைச் சேர்த்துக் கொண்டு அவர்களுடைய ஆலோசனைகளையும் கருத்தில் கொண்டு செயல்படாவிடில், அந்தக் கல்வி சுதேசியம் ஆகாது என்று பாரதியார் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களையும் ஒருங்கிணைத்துச் செயல்படும்போது தேசியக் கல்வி வெற்றிகரமாகச் செயல்படும் என்று மத வேறுபாடுகளைக் கடந்த நிலையில் கருதியுள்ளார். ஜாதி, மதம், பால் வேறுபாடு களைக் கடந்த நிலையில் இந்தியாவெங்கும் தேசியக் கல்வி பரவிட விழைந்த பாரதியாரின் முயற்சிகள், அன்றைய காலகட்டத்தில் முற்போக்கானவை. பாரதியாரின் தேசியக் கல்வி பற்றிய விவரிப்புகள், திட்டங்கள் போன்றவை நடைமுறையில் சாத்தியப்படவில்லை என்றாலும், கவியின் கனவு என்ற நிலையில் பாரதியாரின் கல்வியியல் சிந்தனைகள் வரலாற்று ஆவணமாகியுள்ளன.

**மூல நூல்**

1. சுப்பிரமணிய பாதியார், சி. 2000. பாரதியார் கட்டுரைகள். சென்னை: பழனியப்பா பிரதர்ஸ்.